**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 02.12.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மண்டல அளவிளான விளையாட்டுப் போட்டிகள்**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் 02.12.2022 முதல் 14.12.2022 வரை நடைபெறவுள்ளன.

நான்கு மண்டலங்களுக்கான 4000 மாணவ மாணவியர் பங்கேற்கும் பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டிகள் 10.12.2022 முதல் 14.12.2022 வரை நடைபெறவிருக்கின்றன. ஆண்டுதோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான இவ்விளையாட்டுப் போட்டிகளில் மாணவ மாணவியர் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பெறுகிறார்கள்.

இந்நிகழ்வின் தொடக்க விழாவினை இன்று (02.12.2022) பல்கலைக்கழக விளையாட்டரங்கில் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர். வெ. கீதாலட்சுமி அவர்கள் தேசிய மற்றும் பல்கலைக்கழக கொடிகளை ஏற்றியும், ஒலிம்பிக் விளக்கை ஏற்றியும் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து ஒவ்வொரு கல்லூரி விளையாட்டுச் செயலரின் தலைமையில் விளையாட்டு வீரர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்த 15 நாள் நிகழ்வை முனைவர். ந. மரகதம் முதன்மையர் (மாணவ நல மையம்) வரவேற்புரையாற்றி துவங்கினார். கல்லூரி முதல்வர்கள் பாராட்டு மற்றும் வாழ்த்துரை கூறினர். இப்பெரும் தொடக்க விழாவை சிறப்பாக கொண்டு சென்ற அனைவருக்கும் டாக்டர். ஜே. பி. தேசிக ஸ்ரீநிவாசன், விளையாட்டுத்துறை உதவி இயக்குனர் நன்றியுரை ஆற்றினார். தொடர்ந்து முதல் மண்டலமான 10 கல்லூரிகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமானது.

முதற்கட்டமாக 10 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் 920 பேர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வருகை புரிந்திருக்கின்றனர். 10 வகையான உட்புற மற்றும் வெளிப்புற விளையாட்டுகள் நடைபெறவிருக்கின்றன.

**மக்கள் தொடர்பு அலுவலர்**